நீக்குவதை—தகாத வழியில் நீக்குவதை—தடுக்க அரசாங்கம் மறுக்கிறது என்ற காரணத்தினால் சபையின் மற்ற அலுவல்களை ஒத்திவைத்து இதை விவாதிக்க வேண்டும், நடவடிக்கை எடுத்து எல்லா தொழிலாளிகளையும் வேலைக்கு எடுக்க வழி செய்ய வேண்டும் என்பதற்காகக் கொண்டுவந்திருக்கிறேன். அதிலும் தொழிலாளிகளை வேலைக்கு வைத்துக்கொண்டிருப்பவர்களையும் முந்திய சர்வீசை கணக்கில் எடுத்துக்கொள்ள மாட்டேன் என்று புதிய சர்வீஸாகப் போட்டிருக்கிறார்கள். இதில் சர்க்கார் கால தாமதம் செய்வதால் இதை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

MR. SPEAKER: Does the Hon. Minister want to say anything ?

THE HON. SRI R. VENKATARAMAN: கனம் சபாநாயகர் அவர்களே, விதிகளின்படி இந்த ஒத்திவைப்புப் பிரேரணை செல்லாது என்று எடுத்துச் சொல்லிவிட்டீர்கள். இந்த விஷயத்தில் சட்டம் இருக்கிறது. சட்டப்படி நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறோம். கனம் அங்கத்தினர் கல்யாண சுந்தரம் அவர்கள் பேசியதிலிருந்து இந்த விஷயத்தில் துரித மாகக் கூட நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. ஏனென்றால் 31-ம் தேதியே—10 நாட்களுக்குள்—கன்ஸிலியேஷனுக்குக் கூப்பிட்டார்கள் என்றால், துரிதமாகத்தான் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று தெரிகிறது. இதிலே ரிப்போர்ட் வர வேண்டியிருக்கிறது. சர்க்காரில் இருக்கக் கூடிய கமிஷனருக்கு பல வேலைகள் இருக்கின்றன. அவசரமாக கல்கத்தாவிற்கு சென்றிருப்பதால் வந்த வுடன் சர்க்காருக்கு ரிப்போர்ட் சமர்ப்பிக்க வேண்டும். ஒவ்வொருவரும் அவரவர்களுடைய காரியத்தை உடனடியாக கவனிக்க வேண்டும் என்று சொல்லுவதென்றால் சர்க்கார் நடவடிக்கை எடுப்பது கஷ்டமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

MR. SPEAKER : I said a few days back that the Assembly was not the forum especially for discussing such motions. There are other means of settlement available for such disputes. Because Sri M. Kalyanasundaram, being a Leader of the Party, has brought it. I gave him this concession for bringing in this motion before the House. Hereafter I will not permit him even for bringing in such motions. I will refuse it. I, therefore, rule this motion out of order.

III—ANNOUNCEMENTS.

(1) ELECTION TO THE BOARD OF INDUSTRIES.

MR. SPEAKER : The House will remember that according to the programme fixed by me for the election to the Board of Industries, poll, if any, is to be held between 9 a.m. and 1 p.m. on Monday, the 12th September 1960. As the House is to adjourn to-day (10th September 1960), it will not be possible to conduct the poll on the 12th September 1960. I am, therefore, to extend the

last hour and date for the withdrawal of the candidature to 10 a.m. to-day, the 10th September 1960. Poll, if necessary, will be held on a date to be fixed by me in due course.

(2) ASSOCIATION OF LEGISLATIVE COUNCIL MEMBERS WITH THE COMMITTEE ON ESTIMATES.

MR. SPEAKER : I have to announce that the following five Members have been nominated by the Legislative Council to associate with the Committee on Estimates of the Legislative Assembly for the year 1960–61 :—

(1) Sri T. P. Srinivasavaradan,
(2) Sri N. Nallasenapathi Sarkarai Manradiar,
(3) Sri M. Rajagopal Pillai,
(4) Sri A. Chidambara Mudaliar, and
(5) Sri S. T. Adityan.

IV.—CALLING ATTENTION TO A MATTER OF URGENT PUBLIC IMPORTANCE UNDER RULE 41 *RE* REFUSAL TO GRANT EDUCATIONAL CONCESSIONS TO SCHEDULED CLASS PUPILS IN SUCHINDRUM ENGLISH HIGH SCHOOL.

MR. SPEAKER : I have received a notice under Rule 41 of the Assembly Rules from Sri T. S. Ramaswami calling the attention of the Hon. the Minister for Works to a matter of urgent public importance, viz., refusal to grant educational concessions and scholarships to some Scheduled Class pupils of the S.M.S.M. English High School, Suchindrum, in Kanyakumari district and the consequent refusal of the school authorities to admit them in the classes.

The hon. Member, Sri T. S. Ramaswami, will now speak.

SRI T. S. RAMASWAMI : கனம் சபா நாயகர் அவர்களே, கன்னியாகுமரி ஜில்லாவிலே வேடர் வகுப்பைச் சேர்ந்த 13 மாணவர்கள் இரண்டு, மூன்று வாரமாக எஸ்.எம்.எஸ்.எம். இங்கிலீஷ் ஹைஸ்கூலிலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். காரணம் பட்டியலிலே வேடர்கள் என்று இருக்கிறது. அவர்கள் வேறு பெயர் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கே சாதாரணமாக ஒரு பெயரை ஒவ்வொருவர் ஒவ்வொரு மாதிரியாக வைத்துக்கொள்வதைப் போல ஒரே ஜாதியினருக்கே இரண்டு, மூன்று பெயர்களை வைத்துக்கொள்ளுகிறார்கள். பரையர்கள் என்ற பெயரை யாரும் விரும்புவதில்லை. பரையா என்று ஷெட்யூல்ட் காஸ்ட் லிஸ்ட்டில் இருக்கிறது. சாம்பவர்கள் என்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதே போல் வேடர்கள் என்பதை வேட்டைக்காரர்கள் என்று வைத்துக்கொள்வதுண்டு. யாரெல்லாம் வேட்டைக்காரர்கள் என்று வைத்துக்கொண்டிருக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் சலுகை கொடுக்கவில்லை. வருஷந்தோறும் கலெக்டர் இரண்டும் ஒரே ஜாதிதான் என்று எழுதிக்கொண்டிருக்கிறார்கள். சென்ற பள்ளிக்கூட வருஷத்திலே ஜனவரி மாதத்திலே கலெக்டரிடமிருந்து ஷெட்யூல்ட் காஸ்ட் கமிஷனருக்கு எழுதியனுப்பப்பட்டிருக்கிறது. அவர்களுடைய பெயரையும் சேர்க்கவேண்டுமென்று எழுதியும் காலதாமதம் காரணமாக அவர்களுக்கு